Arimā Nōkku


7:1 ஏப்பிரல் 2013

# அரிமா நோக்கு

ரூ.30

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

ISSN 2320-4842

அரிமா நோக்கு
7:1 ஏப்பிரல் 2013

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## பாப்லோ நெருதா மரணப் பின்புலமும் ஐயங்களும்

நூலகங்கள்
- வ. ஜெயதேவன் 03
உலக வெப்பமயமாதலும் கல்வியியலும்
- ச. அமுதா 06
சைவ பக்தி மரபில் உடல் பற்றிய கருத்தியல்: திருநாவுக்கரசு நாயனாரை மையப்படுத்திய பார்வை
- நா. சுப்பிரமணியன் 09
கி.ராஜநாராயணன் சிறுகதை: பாலியல் சிக்கல்கள்
- கு. சிற்றரசு 16
நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்: விளிம்புநிலை மக்கள்
- நா. சத்யா 19
சிலம்பு கூறும் முற்பிறவி மற்றும் மறுபிறவி மாந்தர்கள்
- வ. சாந்தா 22
நெடுநல்வாடை-ஒரு திறனாய்வு
- வாணி அறிவாளன் 25
சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்
- இரா. கார்த்திகேயன் 30
திருவண்ணாமலை மாவட்டத்துச் சைவ ஆலய விழாக்களில் சமூக நிலைப் பாடுகள்
- பி. சி. ஜெகதா 32
தவம் செய்த தவமாம் மிதிலைச் செல்வி சீதை
- க. சந்திரசேகரன் 34
வள்ளலார் உணர்த்தும் மனித நேயம்
- செ. அமுதவள்ளி 38
The Effectiveness of an Electronic Aided English Language Teaching for Children with Cerebral Palsy: A Case Study
- Gulab Chandra Singh, Paramadhyalan &Thiruvalluvan
தொல்காப்பியமும் தொடரனியலும்
- செ. வை. சன்முகம் 44
தமிழ் யாப்பியல்...
ஈ. த. தணிகாசல முதலியார்
- ய. மணிகண்டன் 53

உலகப் புகழ்பெற்ற கவிஞர் பாப்லோ நெருதா மறைந்து நாற்பது ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. கவிதைக்கு அரசியலின் பெருமிதத்தையும் அரசியலுக்குக் கவிதையின் அர்த்தமிக்க அழகையும் அள்ளி வழங்கிய அவர் வாழ்வு பேசப்படுவது போலவே அவருடைய மரணமும் பேசப்படுகிறது. நோபல் கவிஞரான நெருதா உலகெங்கும் வாழும் அச்சமற்ற போராளிகளுக்காக ஆதரவுக்கரம் நீட்டிய காரணத்தினாலேயே, - வெப்பம் கொப்பளிக்கும் கவிதைத் தளவாடங்கள் தயாரித்துக் கொடுமைகளுக் குள்ளான நாடுகளுக்கு கொடுத்ததனாலேயே, ஆதிக்க சக்திகள் அழித் தொழிக்கத் தயார்செய்து வைத்திருந்த பட்டியலில் இடம் பெற்றிருந்தார். எனவேதான் அவர் புற்றுநோயால் இறந்தாரா என்கிற வினா இன்றுவரை தொடர்ந்து அதிர்வுகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலே நாட்டுத்தலைவர் சால்வதார் அலெண்டே அமெரிக்க ஆதரவுக் கூலிப்படையால் 1973 செப்டம்பர் 11 இல் கொல்லப் பட்டார் என்ற செய்தி வெளிப்பட்டது. அலெண்டே கொல்லப்படவில்லை; தன்னைத்தானே மாய்த்துக்கொண்டார் என்று இச்செய்திக்கு வேறுமுகமும் கொடுக்கப்பட்டது. நாடு சூறையாடப்பட்டது; பொதுவுடைமைவாதிகள் ஆதரவுக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் வேட்டையாடப்பட்டனர்; சிறையில் அடைக்கப்பட்டனர்; கொல்லப்பட்டனர். இந்நிகழ்வுகளையொட்டிய 12 இல் நெருதா இறந்துவிட்டார். இறந்தது தன் புற்றுநோயாலா? இல்லை வேறு காரணத்தாலா? என்பதுதான் தொடர்ந்து இருந்துவரும் வினா.

குழப்பமும் கொந்தளிப்பும் கொடியவர்களின் வெறியாட்டமும் மிக்கிருந்த அந்தச் சூழலில் உலகப் பெருங்கவிஞர் நெருதாவை எப்படியேனும் காப்பாற்றியாக வேண்டும் என்று மெக்சிகோ நாட்டுத்தலைவர் லூயி எசி வெர்ரியா தனிவிமானம் ஒன்றை அனுப்பிவைத்தார்; நெருதாவுக்காக அது காத்திருந்தது. புற்றுநோய் மருத்துவத்திற்காகச் சாண்டியாகோவில் இருந்த மிகச் சாதாரணமான சாந்தமரியா மருத்துவமனையில் 72 மணிநேரம் இருக்க நேரிட்ட நிலையில் நெருதாவால் உடனே புறப்பட முடியவில்லை. இன்னும் இரண்டு நாள் கழித்துப் புறப்படலாம் (செப்டம்பர் 20க்குப் பதிலாக) என்றிருந்த நிலையில் வீட்டிலிருந்து சில நூல்களையும் உடைகளையும் நெருதா விரும்பியபடி எடுத்துக்கொண்டுவர, அவருடைய மனைவி மாட்டில்தியும் வலவர் அராயாவும் மருத்துவநிலையத்திலிருந்து புறப்பட்டுச்சென்றனர். அந்த நேரத்தில்தான் என்னவோ நடந்திருக்கிறது.

அந்த நேரத்தில்தான் நெருதா வயிற்றில் ஒரு விபரீதமான ஊசியைப் போட்டிருக்கிறார்கள். உடல்நிலை மளமளவென்று சரிந்துமரணத்தின் மடியில் அவரைக் கொண்டுபோய்ப் போட்டது. அது என்ன ஊசி? போட்டவர் யார்? வினாக்களின் திரள்-ஐயங்களின் பெருக்கம் ஓய்வதாக இல்லை. முடிவாக ஆவணங்கள், பதிவுகள், சான்றுக்கூற்றுக்கள் எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கருதிப் பார்த்த நீதிநாயகம் மரிய கரோசா, நெருதா உடலை வெளியே எடுக்க ஆணையிட்டார். வளர்ந்துவந்திருக்கும் தடய வியல் அறிவியலின் துணையால் நெருதா மரணம் குறித்த ஐயங்கள் ...

ISSN 2320-4842

தீரலாம் என்கிற எதிர்பார்ப்பு நிறைவேறலாம். வினவலாம்: இதனால் என்ன பயன்? மரணத்தின் அமைதியைச் சீரழித்து ஏன் நெருதாவைச் சிதைக்க வேண்டும்? பாப்லோ நெருதா என்னும் மகா கவியை உலகுக்குத் தந்த சிலேவுக்கும், இருபதாம் நூற்றாண்டின் ஒப்பற்ற கவிஞர் இவரே என்று பாராட்டிக் கொண்டிருந்த உலகுக்கும் அவர் இறந்தது எப்படி என்று தெரிந்துகொள்ள முழு உரிமை உண்டா? இல்லையா? ♦

*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

*(மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்

கா. செல்லப்பன்

இரா. இளவரசு

நா. கணேசன் (அமெரிக்கா)

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

நா. முத்துக்குமார்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

மருதூர் அரங்கராசன்

பெ. இலக்குமிநாராயணன்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்

# கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. | 3000/-US | $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 5000/- US | $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. | 10,000/- US | $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் உண்டு.
- புரவலர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 40% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 15,000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 10,000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 3,000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 1,500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*

**கட்டணம் செலுத்த:**

**DD in favour of *'Nokku'* payable at Chennai**
**Indian Overseas Bank (IFSC Code: IOBA0001681)**
**S.B. A/c No. 168101000006423**

## அரிமா நோக்கு

4/ 1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம், சென்னை 600 096
வலைத்தளம்: www. arimaanokku.com
மின் அஞ்சல்: arimaanokku@hotmail.com
செல்: 9380626448